admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

கனி பிரிண்டிங்
DTP
நாளிதழ் வார இதழ் மாத இதழ்
சிறந்த முறையில் (DTP) செய்து தரப்படும்
நாளிதழ் மந்திலி மேகஸிங் குறைந்த விலையில் பிரிண்டிங் செய்து தரப்படும்
தொடர்புக்கு : 94436 99066

| Vol: 03 | Issue: 224 | 4 Pages | 21.06.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 224 | 4 பக்கங்கள் | 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினு மென்**

**விளக்கம்:**
**செவியால் கேள்விச் சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன, உயிரோடு வாழ்ந்தாலும் என்ன.**

## ஈரானில் கொடூரம்: ஹிஜாப் அணியாமல் வீடியோ வெளியிட்ட பாடகிக்கு 74 கசையடி



தெஹ்ரான், ஜூன் 21

ஈரானை சேர்ந்த பாடகி ஹிஜாப் அணியாமல் இசைநிகழ்ச்சியில் பங்கேற்றதால் அவருக்கு 74 கசையடிகள் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது.

ஈரானை சேர்ந்த பாடகி பிரஷ்டொ அகமதி (வயது 29). இவர் கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஈரானில் நடந்த இசைநிகழ்ச்சியில் ஹிஜாப் அணியாமல்பாடல்பாடினார். இந்தபாடல்வீடியோ யூடியூபில் வெளியிடப்பட்டது. இந்த யூடியூப் வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது.

அதேவேளை, ஹிஜாப் அணியாமல் வீடியோ வெளியிட்டதாக பிரஷ்டொ அகமது மீது ஈரான் அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர். மேலும், அவரை ஈரான் போலீசார் கைது செய்தனர். பின்னர், கைது செய்யப்பட்ட பிரஷ்டொஅகமதி ஜாமினில் விடுதலை செய்யப்பட்டார்.

ஜாமினில் விடுதலை செய்யப்பட்டபோது பிரஷ்டொ அகமதி மீதான வழக்கு ஈரான் கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் பிரஷ்டொ அகமதி குற்றவாளி என்று கோர்ட்டு தீர்ப்பளித்தது. மேலும், பிரஷ்டொ அகமதிக்கு 74 கசையடிகளை தண்டனையாக கொடுக்கவும் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. பிரஷ்டொ அகமதி 2 ஆண்டுகள் வெளிநாடு செல்லவும், இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் கோர்ட்டு தடை விதித்துள்ளது. ஹிஜாப் அணியாமல் பாடல் பாடிய ஈரான் பாடகிக்கு 74 கசையடிகள் தண்டனை வழங்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

## 'இத்தாலியில் அவரது புகழ் சரிந்துவிட்டது...' 'நீங்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம்..' டிரம்ப், மெலோனி வார்த்தை மோதல்



வாஷிங்டன், ஜூன் 21

இத்தாலியில் மெலோனியின் புகழ் சரிந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் விமர்சித்த நிலையில், டிரம்ப் உடனான நட்பு தனது புகழுக்கு எந்த வகையிலும் உதவவில்லை என இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி காட்டமாக தெரிவித்துள்ளார்.

பிரான்சின் ஏவியான் நகரில் ஜி7 மாநாடு நடைபெற்றது. இதில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, பிரான்ஸ் அதிபர் மேக்ரான், ஜெர்மனி பிரதமர் மெர்ஸ், பிரதமர் மோடி, பிரேசில் அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாடு முடிந்த நிலையில், டிரம்ப் இத்தாலியைச் சேர்ந்த செய்தி நிறுவன ஒன்றிற்கு பேட்டி அளித்துள்ளார். அப்போது அவர், "ஜி7 மாநாட்டில் நான் மெலோனியுடன் பேசியதால் அநேகமாக அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார். என்னுடன் ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என மெலோனி கெஞ்சினார். அதை நான் எடுத்திருக்க மாட்டேன். இருந்தாலும் அவர் மீது எனக்கு பரிதாபம் ஏற்பட்டதால் புகைப்படம் எடுத்துக் கொண்டேன்" என்று கூறினார்.

இதற்கு பதிலடியாக மெலோனி தனது 'எக்ஸ்' தள பக்கத்தில், "டிரம்ப் கூறியிருப்பது முற்றிலும் பொய். அவரது பேச்சை கேட்டதும் நான் திகைத்துப் போனேன். நானும், இத்தாலியும் எதற்கும் கெஞ்ச மாட்டோம். அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அப்பட்டமாகப் பொய் பேசியிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. நட்பு நாடுகளின் தலைவர்களிடமே இவர் ஏன் இப்படி நடந்துகொள்கிறார் எனப் புரியவில்லை" என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, டிரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டார். அந்த பதிவில், "ஜி7 மாநாட்டின்போது இத்தாலி பிரதமர் மெலோனி என்னுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டே இருந்தார். இத்தாலியில் அவரது புகழ் சரிந்துவிட்டது. ஈரானை அணு ஆயுதம் தயாரிக்க விடாமல் தடுத்து, இத்தாலியை உண்மையாக பாதுகாக்கும், நேசிக்கும் அமெரிக்காவை மெலோனி புறக்கணித்தார்.


இத்தாலியில் உள்ள விமான ஓடுதளங்களை அமெரிக்க விமானப்படை பயன்படுத்த அவர் அனுமதிக்கவில்லை. இதனால் எங்கள் தளவாடங்களை கொண்டு செல்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. இருப்பினும் இத்தாலி மற்றும் நேட்டோ நாடுகளின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா ஒவ்வொரு ஆண்டும் பல நூறு பில்லியன் டாலர்களை செலவு செய்கிறது.

இப்போது ஈரான் ராணுவத்தை அமெரிக்கா தோற்கடித்துவிட்டதால், அமெரிக்காவுடன் மீண்டும் நட்பை வலுப்படுத்தி இத்தாலியில் தனது செல்வாக்கை மீட்டெடுக்க மெலோனி விரும்புகிறார்" என்று பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில், டிரம்ப்பின் பதிவிற்கு மெலோனி மீண்டும் பதிலடி கொடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "அதிபர் டிரம்ப்பின் பேச்சு அர்த்தமற்றது. எனது புகழுக்கு டிரம்ப்புடனான நட்பு எந்த வகையிலும் உதவவில்லை. எனது புகழ் டிரம்ப்புடனான நட்பை சார்ந்ததும் இல்லை. எனது புகழ் இத்தாலியின் நலன்களை பாதுகாப்பதில் எனக்கு இருக்கும் திறன்களை மட்டுமே சார்ந்துள்ளது. இதையே நான் எப்போதும் செய்து வந்துள்ளேன்.

இத்தாலியில் அமெரிக்க படைத்தளங்களுக்கான அனுமதி தொடர்பான விவகாரத்திலும், ஒப்பந்தத்தின் அடிப்படையில் எங்கள் நாட்டின் நலன் சார்ந்துதான் நான் முடிவுகளை எடுத்துள்ளேன். நான் பிரதமராக இருக்கும் வரை எந்த ஒப்பந்தமும் மீறப்படாது. இத்தாலி ஒரு இறையாண்மை கொண்ட நாடு. எனது புகழ் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் புகழ் எந்த நிலையில் உள்ளது என்பதை கவனியுங்கள்" என்று காட்டமாக பதிவிட்டுள்ளார். இருநாட்டு தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த வார்த்தை மோதல் சர்வதே அளவில் பேசுபொருளாகியுள்ளது.

## உக்ரைன் மீது ரஷியா ஏவுகணை தாக்குதல்



உக்ரைன் மீது ரஷியா இன்று நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், 9 பேர் படுகாயமடைந்தனர்.

உக்ரைன் , ரஷியா போர் இன்று 1,577வது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. போர் நிறுத்த முயற்சிகளை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மேற்கொண்ட நிலையில் அது தோல்வியில் முடிந்தது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், உக்ரைனின் கார்கிவ் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பை குறிவைத்து ரஷியா இன்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், 9 பேர் படுகாயமடைந்தனர்.

# சட்டமன்ற நேரலை துண்டிப்பு: மக்களையே அவமானப்படுத்தும் செயல் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, ஜூன் 21

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டமன்ற நேரலை குறித்து, சட்டப்பேரவை தலைவருக்கு எழுதியுள்ள கடிதம்:

பேரவை தலைவர் அவர்களுக்கு, வணக்கம்.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் நடவடிக்கைகள் நேரலை செய்யப்படும் என்று முதல்அமைச்சர் அளித்த வாக்குறுதிக்கு மாறாக, தற்போது நடைபெற்று வரும் ஆளுநர் உரை மீதான விவாதம் நேரலை செய்யப்படுவதில்லை என்பதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

நேரலைதுண்டிக்கப்பட்டிருக்கிறது "கொடுத்த வாக்கை காப்பாற்றியுள்ளார் முதல்அமைச்சர். இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருட்டடிப்பு செய்யப்பட்ட சட்டப்பேரவை நேரலை, மீண்டும் தொடங்கியிருக்கிறது. இனி சட்டப்பேரவை நேரலை தொடரும். இது ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டு. வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையான நிர்வாகத்திற்கு இன்றைய நிகழ்வு மிகப்பெரிய எடுத்துக்காட்டு" என அமைச்சர் ராஜ்மோகன் குறிப்பிட்டு சொன்ன அன்றே நேரலை துண்டிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய தினம் மேகதாது அணை கட்டுவதைகண்டித்துமுதல்அமைச்சர் கொண்டுவந்தஅரசினர்தீர்மானத்தின் மீதான விவாதங்கள் நேரலை செய்யப்பட்டன. அடுத்து, உடனடியாக இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் உரை மீதான விவாதங்கள் தொடங்கிய நிலையில் அவை இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன. ஆளுநர் உரை மீதான விவாதம் நேரலை செய்யப்படவில்லை. இது இன்றைய ஆளுங்கட்சி கொடுத்த வாக்குறுதிக்கு மாறானது ஆகும்; மக்கள் பிரதிநிதிகளின் குரலை மறைப்பது ஆகும்; சட்டமன்றமாண்பைகுலைப்பதாகும்.



நேரலை நிறுத்தப்பட்டது மிகப்பெரிய தவறு என்றால், அதைவிட பெரிய தவறு பின்னர் இழைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரின்விவாதங்கள் முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டு, ஆளுங்கட்சியினருக்கு வேண்டிய விவாத வீடியோக்கள் மட்டும் எடிட் (Edit) செய்யப்பட்டு மாலையில் வெளியிடப்பட்டுள்ளன. பேச்சுரிமையை, அதிலும் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவைக்குள் இருக்கும் பேச்சுரிமையை நசுக்கும் செயலாகும். இது நல்லதொரு ஆக்கப்பூர்வமான சட்டமன்ற ஜனநாயகத்திற்கு உகந்தது இல்லை.

'மாற்றம்' என்ற சொல்லை மையமாக வைத்து தேர்தலை சந்தித்தவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் குரலை நசுக்குவதுதான் அவர்கள் செய்ய நினைக்கும் மாற்றமா? மக்கள் பிரதிநிதிகளின் பேச்சை மறைப்பது மக்களையே அவமானப்படுத்துவது ஆகும்.

இந்த அரசு வெளிப்படைத்தன்மை உடைய அரசு என்ற பொருள்பட முதல்அமைச்சர் பலமுறை பேசிய நிலையில், இப்போது அதற்கு முரணாக அவை விவாதங்களை, குறிப்பாக எதிர்க்கட்சியினரின் விவாதங்களை, வாக்களித்த மக்கள் தெரிந்துகொள்ள விடாமல் செய்வது ஜனநாயகத்தையே இருட்டில் தள்ளுவதற்கு சமம்.

மேலும், ஜனநாயகத்தின் நான்காவது தூண் என போற்றப்படும் ஊடகங்களுக்கு செய்திகளை வழங்க மறுப்பதும், அரைகுறை செய்திகளை அளிப்பதும், "நாங்கள் தருவதை மட்டுமே ஒளிபரப்ப வேண்டும்" என்று சொல்வதும் பாசிச நடவடிக்கைகள் ஆகும்.

ஒரே நேரத்தில் சட்டசபை, மக்கள் பிரதிநிதிகள், ஊடகங்கள் ஆகிய அனைத்தையும் அவமானப்படுத்தும் செயல் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறேன். வரும் திங்கட்கிழமையன்று எதிர்க்கட்சி தலைவரான நானும், பிற தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் உரையாற்ற உள்ளதால், தமிழ்நாடு சட்டப்பேரவையின் நடவடிக்கைகளை நேரலை செய்வதற்கு தங்களுக்கு உள்ள பேரவை தலைவர் அதிகாரத்தை பயன்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இல்லாவிட்டால் சட்டமன்றம் கூடுவதற்கான அர்த்தமே இல்லாமல் போய்விடும்; மக்கள் அளித்த வாக்குக்கே மரியாதை இல்லாமல் போய் விடும். சட்டமன்றத்தையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் அவமானப்படுத்தும் இதுபோன்ற செயல்களை இனியும் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

## திருப்பத்தூர் அருகே டிராக்டர் விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அடுத்த மண்டலநாயன குண்டா பகுதியை சேர்ந்த நல்லதம்பியின் மகன் மோனித் (வயது 12). தனியார் பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தார். மோனித்தின் தாத்தாவுக்கு சொந்தமான விவசாய நிலத்தில், டிராக்டர் மூலம் நிலத்தை உழும் பணி நடைபெற்று வந்தது.

அப்போது டிராக்டரில் அமர வேண்டும் என சிறுவன் தனது தாத்தாவிடம் ஆசை தெரிவித்துள்ளார். பேரனின் ஆசையை நிறைவேற்றும் வகையில் தாத்தா டிராக்டர் ஓட்டுநரிடம் கூறி சிறுவனை டிராக்டரில் அமர வைத்துள்ளார்.

இந்த நிலையில் கரடு முரடான நிலத்தில் டிராக்டர் சென்று கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக சிறுவன் நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார். இதனை கவனிக்காமல் ஓட்டுநர் டிராக்டரை இயக்கியதில், சிறுவன் மீது டிராக்டர் ஏறி இறங்கியது. பலத்த காயமடைந்த சிறுவனை குடும்பத்தினர் மீட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். தகவலறிந்த கந்திலி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சிறுவனின் உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். பேரனின் சிறிய ஆசையை நிறைவேற்ற நினைத்த தாத்தாவுக்கு பேரனை இழந்த சோகம். ஏற்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## '11 ஆண்டுகளாக மேகதாது திட்டத்தை தடுக்க போராடி வரும் ஒரே கட்சி ம.தி.மு.க.தான்' வைகோ

தேனி, ஜூன் 21



மேகதாது அணை திட்டத்தை தடுப்பதற்கு 11 ஆண்டுகளாக போராடி வரும் ஒரே கட்சி ம.தி.மு.க.தான் என அக்கட்சியின் பொதுச்செயாலளர் வைகோ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தேனியில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

"மேகதாது அணைக்கு எதிராக தமிழக சட்டமன்றத்தில் நேற்று முதல்அமைச்சர் விஜய் ஒரு நல்ல தீர்மானத்தை கொண்டு வந்தார். அனைத்து கட்சிகளும் ஒருமனதாக இணைந்து அந்த தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். ஆனால் ஒன்றை எச்சரிக்க விரும்புகிறேன். மேகதாது திட்டத்தை கர்நாடக அரசு மட்டும் செய்யவில்லை. இதற்கு பின்னால் இருந்து இயக்குவது மத்திய பா.ஜ.க. அரசுதான்.

கடந்த 2014ம் ஆண்டு டிசம்பர் 7, 8ந்தேதிகளில் டெல்லியில் ஒரு ரகசிய கூட்டம் போட்டனர். அதில் கர்நாடக எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் எல்லோரும் கலந்து கொண்டனர். மத்திய அரசின் அப்போதைய சுற்றுச்சூழல் மந்திரி ஜவடேகர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். அப்போது கர்நாடக மந்திரிகளிடம், மேகதாது அணையை கட்டுவதற்கு நாங்கள் வெளிப்படையாக அனுமதி தர மாட்டோம், ஆனால் நீங்கள் அணையை கட்டிக் கொண்டே இருங்கள் என்று மத்திய அரசு தரப்பில் சொல்லப்பட்டது.

இந்த சதித்திட்டம் ஒரு ஆங்கில நாளிதழ் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது. உடனடியாக நான் காவிரி பாதுகாப்பு இயக்கத்தை ஆரம்பித்தேன். ஊர் ஊராகச் சென்று மேகதாதுவில் அணை கட்டப் போகிறார்கள் என்ற விஷயத்தை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தேன். 11 ஆண்டுகளாக மேகதாது திட்டத்தை தடுக்க போராடி வரும் ஒரே கட்சி ம.தி.மு.க.தான். இப்போது எல்லோரும் அறிக்கை விடலாம், குரல் கொடுக்கலாம். ஆனால் அது அறிவிக்கப்பட்ட காலத்தில் இருந்தே போராடிய கட்சி ம.தி.மு.க. மட்டும்தான்.

தமிழ்நாட்டின் வாழ்வாதாரங்களை, ஜீவாதாரங்களைகாப்பாற்றும் கடமையில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். நாங்கள் செய்கின்ற பணிகளுக்கும், வாக்குகளுக்கும் சம்பந்தமே கிடையாது. ஆனாலும், நாம் பிறந்த பொன் நாடாகிய இந்த இன்பத் தமிழ்நாடு பாதிப்புகளுக்கு ஆளாகிவிடக்கூடாது என்பதற்காகவே, எங்களை நாங்கள் அர்ப்பணித்துக் கொண்டு பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## முதல்அமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு ரத்த தானம் செய்த அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார்

சென்னை, ஜூன் 21



த.வெ.க. தலைவரும், தமிழகத்தின் முதல் அமைச்சருமான ஜோசப் விஜய், நாளை மறுதினம் தனது 52வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். நீண்ட காலமாக நடிகராக பிறந்த நாளை கொண்டாடிய விஜய், முதல்அமைச்சராக பதவியேற்ற பிறகு கொண்டாடும் முதல் பிறந்த நாள் இது.

பெரம்பூர் தொகுதி எம்.எல்.ஏ.வாக உள்ள முதல்அமைச்சர் விஜய்க்கு, வியாசர்பாடி பகுதியில் எம்.எல்.ஏ. அலுவலகம் தயாராகி வருகிறது.

இந்த எம்.எல்.ஏ. அலுவலகத்தை, தனது பிறந்த நாளான வரும் 22ந் தேதி திறக்க திட்டமிட்டுள்ள முதல்அமைச்சர் ஜோசப் விஜய், தொகுதி மக்களுடனேயே கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடவும் தொகுதி மக்களின் குறைகளை கேட்க முடிவு செய்துள்ளாராம்.

சினிமா உச்ச நிலையில் இருந்த தளபதி விஜய், தற்போது தமிழக முதல்அமைச்சராக இந்த பிறந்தநாளை எதிர்கொள்வதால், தமிழகம் முழுவதும் அவரது கட்சியினரிடமும், ரசிகர்களிடமும் தற்போதே உற்சாகம் தொற்றிக்கொண்டுள்ளது; பிறந்தநாளை கொண்டாட விரிவான ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

விஜய் மக்கள் இயக்கத்தினர் மற்றும் தவெக தொண்டர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் கோயில்களில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டு இந்த நாளை மிக விமர்சையாக கொண்டாட திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிலையில் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் அண்ணன்சி.ஜோசப்விஜயின்பிறந்தநாளை முன்னிட்டு, இன்று மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் வடக்கு பகுதியில் நடைபெற்ற இரத்ததான முகாமில் கலந்து கொண்டு இரத்தம் தானம் வழங்கினோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

## சமையல் சிலிண்டர், பைக்குகளுக்கு மாலை அணிவித்து சி.பி.எம். நூதன போராட்டம்



தூத்துக்குடி, ஜூன் 21

தொடர்ந்து உயர்ந்து வரும் விலைவாசி உயர்வை உடனடியாக கட்டுப்படுத்த கோரியும், தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் 44 தொகுப்புச் சட்டங்களை நான்கு சட்டங்களாக மாற்ற முயலும் மத்திய அரசைக் கண்டித்தும், கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரமாக உள்ள 100 நாள் வேலைத் திட்டத்தை முழுமையாக பொதுமக்களுக்கு வழங்கிட வலியுறுத்தியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் தொடர் ஆர்ப்பாட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

அதன் ஒரு பகுதியாக தூத்துக்குடி மாநகரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ள பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வை பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில், சமையல் சிலிண்டர் மற்றும் பைக்குகளுக்கு மாலை அணிவித்து சி.பி.எம். கட்சியினர் தங்களது கண்டனத்தை நூதன முறையில் வெளிப்படுத்தினர். மாநகரக் குழு உறுப்பினர் நாகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் அர்ஜுனன் கலந்துகொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினார். மேலும் மாவட்ட செயலாளர் ஆறுமுகம், மாநகர செயலாளர் முத்து, ஒன்றிய செயலாளர் சங்கரன் ஆகியோர் முன்னிலை வகித்து மத்திய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநகரக் குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், இனிதா, ஆனந்த், மாமன்ற உறுப்பினர் முத்துமாரி, கிளைச் செயலாளர்கள் வயணப்பெருமாள், மனோகரன், ஆறுமுகம், சசிகுமார் உள்பட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் பலர் கலந்துகொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

# ‘தொழில் முதலீடு ஆந்திராவுக்கு சென்றது குறித்து சட்டமன்றத்தில் பதில் அளிப்பேன்’ அமைச்சர் கீர்த்தனா

சிவகாசி, ஜூன் 21

தமிழகத்திற்கு வரவேண்டிய தொழில் முதலீடு ஆந்திராவுக்கு சென்று விட்டதாக எழுந்துள்ள புகார் குறித்து சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினர்கேள்வி எழுப்பினால், தகுந்த பதில் அளிப்பேன் என தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது அவர் கூறியதாவது;




“தமிழகத்திற்கு வரவேண்டிய தொழில் முதலீடு ஆந்திராவுக்கு சென்று விட்டது என்று கூறுகிறார்கள். அதற்கு ஒரு தக்க பதிலடியை, சரியான இடத்தில் கொடுக்க வேண்டும். சட்டமன்றத்தில் இது குறித்து எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்புவார்கள் என நம்புகிறேன். அப்போது, தொழில் முதலீடு எந்த நேரத்தில் ஆந்திராவுக்கு சென்றது என்பது குறித்து ஆதாரத்துடன் பதில் அளிப்பேன்.

த.வெ.க. ஆட்சி அமைத்து ஒரு மாதம்தான் ஆகிறது. 30 நாட்களுக்குள் தொழில் முதலீடு மாநிலத்தை விட்டு சென்றுவிடுமா? தொழில் முதலீட்டிற்கான நடைமுறைகள் சரியாக நடக்காததால்தான் அவர்கள் மாநிலத்தை விட்டு சென்றிருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளன.

மேலும், டி.ஆர்.பி.ராஜா தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் இன்னும் தொழில் துறைஅமைச்சர்என்றுநினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். நீங்கள் வேண்டாம் என்றுதான் மக்கள் உங்களை வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள். தயவுசெய்து அதை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பண்ணையார்தனத்தை விட்டுவிடுங்கள்.

நாங்கள் இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். எங்களுக்கான மரியாதையும், மக்களுக்கான மரியாதையும் கொடுக்கப்பட வேண்டும். மக்களை அவமதிப்பது போன்றவிஷயங்களைத்தான்இன்னும்அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நிதி ஆயோக் கூட்டத்தில்தமிழகத்தை 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்அமைச்சர் விஜய் கூறியுள்ளார். அதற்கான தொலைநோக்குப் பார்வை அறிக்கையை தயார் செய்து வருகிறோம். அதில் எப்படிப்பட்ட திட்டங்களை நாங்கள் கொண்டுவரப் போகிறோம் என்பது உங்களுக்கு தெரியவரும்.” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இந்திய யூனியன் முஸ்லிம் தமிழ்நாடு மாநில பொது குழு கூட்டம்

காதர் மொய்தீன், இந்திய யூனியன் முஸ்லிம் தமிழ்நாடு மாநில பொது குழு கூட்டம் காலை 11 மணி முதல் இப்போது வரை நடைபெற்றது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில பொதுக் குழுவில் 500 கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளார்கள் அதில் 483 பேர் பங்கேற்றனர். இது மிக முக்கியமான தருணத்தில் கூட்டப்பட்ட பொதுக்குழு. இந்த பொதுக்குழுவில் 14 முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளோம். அதில் மிக முக்கியமான தீர்மானம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் இந்த ஆண்டு கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மாநிலங்களில் நடந்த தேர்தல்களில் கேரளாவில் 28 தொகுதிகளில் போட்டியிட்டு 22 தொகுதிகளில்வெற்றிபெற்றுகாங்கிரஸ்தலைமையிலான கூட்டணியில் 5 அமைச்சர்களை பெற்று உள்ளோம். கேரளாவில் தொடர்ந்து காங்கிரஸ் கூட்டணியில் இணைந்து வெற்றி பெறும் போது எல்லாம் 5 அமைச்சர்களை பெறுவோம்.



மேற்கு வங்கத்தில் எந்த தொகுதியிலும் வெற்றி பெற முடியவில்லை. தமிழகத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திமுக ஆதரவோடு, கூட்டணி ஆதரவோடு இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளோம். நீண்ட காலத்திற்கு பிறகு தமிழகத்தில் இரண்டு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர் 60 ஆண்டுகளுக்கு மேல் திமுக கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளது. தொடர்ந்து திமுக கூட்டணியில் தான் வெற்றி பெற்றுள்ளோம். இது நீண்ட கால வரலாறு

இந்த தேர்தல் முடிவில் திமுக மீண்டும் ஆட்சிக்கு வரும் என்ற நம்பிக்கையோடு தான் தேர்தலில் ஈடுபட்டு உழைத்துபாடுபட்டு முழுமையாகநம்பினோம். நடக்கும் என்று நம்பி செயல்பட்டோம். ஆனால் கடவுள் நாட்டம் வேறாகஇருந்துஅனைத்துஇடங்களில்விசில்ஊதப்பட்டு ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதியில் வெற்றி பெற்றது. கூட்டணி கட்சிகள் உதவியுடன் ஆட்சி அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இது பற்றி திமுக தலைவரிடம் கலந்து பேசினோம். பல்வேறு கருத்துகளை பரிமாறினோம். இறுதியாக தமிழக வெற்றிக் கழகத்திற்கு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவை நிபந்தனை இல்லாமல் ஆட்சி அமைய ஆதரவு கொடுத்தோம். நாங்கள் ஏன் ஆதரவு கொடுத்தோம் அதற்கு என்ன அவசியம் வந்தது என்று திமுக தலைவரிடம் சொன்னோம். ஜனாதிபதி ஆட்சி வந்தால் மறைமுக பாஜக ஆட்சி வர நாங்கள் காரணமாகிவிட கூடாது என்று. இந்தியாவில் இருந்து பாகிஸ்தான்பிரிந்தபோதுஎவ்வளவுவேதனைபட்டார்கள் என்று அறிந்து எங்கள் சமுதாய மக்கள் விருப்பத்தோடு ஆதரவு அளித்தோம் நிபந்தனையற்ற ஆதரவு கொடுத்திருந்தாலும், பெரும் மனது செய்து எங்களை தனியாகஅழைத்துநேரடியாகஅழைத்துகடிதம்கொடுத்து சொல்லப்பட்டது. அகில இந்திய தலைமை கேரளாவில் உள்ளது. அவர்களை கலந்து கொண்டு அவர்கள் ஒப்புதல் பெற்றுஅமைச்சரவையில்ஈடுபடஆலோசனைகொடுத்த பின் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் ஷாஜகான் அவர்களை மந்திரி சபையில் இடம்பெற அறிவித்தோம். தமிழக வெற்றி கழக அரசு தமிழகத்தை ஆண்டு கொண்டுள்ளது. இந்த நல்லாட்சி தொடர வேண்டும் என்றுஎல்லோரும்விரும்புகிறார்கள்அதன்படிநல்லாட்சி தொடர வேண்டும். தமிழக அமைச்சரவையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம்பெற வைத்ததற்கு தமிழக வெற்றிக்கழகதலைவர்விஜய் மற்றும்அவரின்கட்சிக்கும் நன்றி

இந்த நல்லாட்சி தொடர வேண்டும் இஸ்லாமிய மார்க்கத்தின் 5 கடமை உள்ளது 6 ஆவது கடமை ஜனநாயகத்தில் ஓட்டு போட வேண்டும் அதை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னேன், திமுகவுக்கு ஓட்டு போட வேண்டும் என்று நான் சொல்லவில்லை நான் சொல்லாததை கேட்டால் எப்படி என கோபத்துடன் செய்தியாளரைஆவேசத்துடன்எதிர்த்துகேள்விகேட்டார் இந்த ஆட்சி சிறப்பாக நடைபெற வேண்டும் என்பது தமிழ் மக்கள் விருப்பம் எங்கள் விருப்பமும் அது தான். இந்த ஆட்சி தொடர்வதற்கு எல்லா வகையில் நாங்கள் உடன் இருப்போம் தமிழக வெற்றிக் கழக கூட்டணிக்கு பெயர் சூட்டப்படவில்லை பெயர் சூட்டப்படாத கூட்டணியில் உள்ளோம் முதலமைச்சர் சட்டமன்றத்தில் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்.

சட்டம் ஒழுங்கு பிரச்சனை குறித்து சட்டமன்றத்தில் பிரச்சனை எழுந்தால் பேசுவார். பெண்களுக்கு எதிரான பிரச்சினையை இன்று நேற்றா நடக்கிறது சிங்க பெண்கள் படையை உருவாக்கி இருக்கிறார்கள். நேற்று, இன்று, நாளை திமுக கூட்டணியில் இருப்போம் என்று சமூக வலைதளங்களில் பதிவிட்டது குறித்த கேள்விக்கு, திமுக கூட்டணியில் இருக்கும் போது சொன்னேன் இப்போது தமிழக

வெற்றிக் கழக கூட்டணியில் இருக்கிறோம், அதில் இன்றும் இருக்கிறோம் நாளையும் இருக்கிறோம். சோபா மாடல் ஆட்சி என்ற விமர்சனம் பற்றிய கேள்விக்கு,

நாங்கள் சோபா வாங்கவில்லை சார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அலுவலகத்திற்கு எந்த முதலமைச்சரும் வந்தது இல்லை. முதல்வர் 4 முறை வருகிறேன் என்று சொன்ன போது வேண்டாம் இது சிறிய தெரு என்று சொன்னேன். வாடகை சோபா எல்லாம் அவர் வருகிறார் என்று வாங்கி போட்டோம் அதை மறுநாள் காலையில் எடுத்து சென்று விட்டார்கள் நாங்கள் வேறு எந்த சோபாவும் வாங்கவில்லை (சிரித்து கொண்டே பதில் அளித்தார்) மேகதாது அணை கட்டி விட்டால் நமக்கு வரும் காவிரி நீர் வராமல் கூட போகலாம் அதனால் தான் எல்லா கட்சி சார்பில் தீர்மானம் போடப்பட்டுள்ளது. அந்த தீர்மானம் அடிப்படையில் அனைத்து கட்சி சார்பிலும் பிரதமரை சந்தித்து வற்புறுத்துவோம்

# தூத்துக்குடி பட்டாசு ஆலை விபத்தில் தொழிலாளி உயிரிழப்பு: 25 பேர் படுகாயம்




தூத்துக்குடி, ஜூன் 21

தூத்துக்குடி மாவட்டம் மாசார்பட்டி காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் தனியார் பட்டாசு ஆலையில் இன்று மாலை எதிர்பாராத விதமாக வெடி விபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆலையில் சுமார் 60க்கு மேற்பட்ட அறைகள் உள்ளன. விபத்து ஏற்பட்ட சமயத்தில் சுமார் 50க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில் இருந்துள்ளனர்.

சனிக்கிழமை என்பதால் சம்பளம் போடும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது ஆலையில் பட்டாசுகள் வைக்கப்பட்டிருந்த ஒரு அறையில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்தில் ஒரு தொழிலாளி உயிரிழந்தார். மேலும், சுமார் 25க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் காயமடைந்தனர். இந்த விபத்து குறித்து தகவலறிந்த வந்த தீயணைப்பு வீரர்கள், படுகாயமடைந்தவர்களை மீட்டு சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். உயிரிழந்த தொழிலாளியின் உடல் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வெடி விபத்து குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பென்னாகரம் அருகே முன்விரோதம் காரணமாக பெண்ணிற்கு அரிவாள்வெட்டு: வாலிபர் கைது

தருமபுரி, ஜூன் 21

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அடுத்த இரங்காட்டுக்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த லட்சுமி (50) என்பவர் கணவரை பிரிந்து தனியாக வசித்து வந்தார். இந்நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த வஜ்ரவேல் மகன் குமரவேல் என்பவருக்கும் லட்சுமிக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்கு வாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த குமரவேல் இரவு நேரத்தில் லட்சுமியை அரிவாளால் சரமாரியாக வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த லட்சுமி சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்த பென்னாகரம் போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று, லட்சுமியின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இச்சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திய போலீசார், குமரவேலை கைது செய்தனர்.

விசாரணையில் லட்சுமியை வெட்டிக்கொலை செய்ததை அவர் ஒப்புக்கொண்டதாக போலீசார் தெரிவித்தனர். தொடர்ந்து அவரிடம் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. உயிரிழந்த லட்சுமிக்கு ஒரு மகள் உள்ளார். அவர் திருமணமாகி வெளியூரில் வசித்து வருவதாக கூறப்படுகிறது.

# அதிமுகவுடன் திமுக கூட்டணி வைத்தால் என்ன தவறு? ஆர்.எஸ்.பாரதி பரபரப்பு பேச்சு

சென்னை, ஜூன் 21

அதிமுகவுடன் திமுக கூட்டணி வைத்தால் என்ன தவறு? என்று திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.

திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி அக்கட்சியின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது,

யார்நண்பர்கள்யார்பகைவர்கள்என்பதைஅடையாளம் காண்பதற்கு இந்த தேர்தல் நல்ல பாடமாக அமைந்தது. மிக விரைவில் மாற்றம் வரும். நாங்கள் (திமுக) யார் என்பதை காட்டுவோம்.

அதிமுகவில் இருந்து விலகியவர்கள் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைவதுபோல எங்கள் கூட்டணியில் வெற்றிபெற்றுவிட்டு தவெகவில் இணைவர்கள் தங்கள் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு அக்கட்சியில் இணைய வேண்டும்.

இந்த தேர்தலே வித்தியாசமான தேர்தல். யாரும் விஜய் வெற்றிபெறுவார் என்று கூறவில்லை. அவர் எப்படியோ வந்துவிட்டார். இப்படியொரு அதிசயம் நடந்ததால் பலவீனமானவர்கள் பலியாகிவிட்டார்கள். என்றார்.

தேர்தல் முடிந்ததும் திமுகவும், அதிமுகவும் கூட்டணி ஆட்சி அமைக்க பேச்சுவார்த்தை நடத்தியதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தலைவர் சண்முகம் குற்றஞ்சாட்டியுள்ளது குறித்து ஆர்.எஸ். பாரதியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அந்த கேள்விக்கு பதில் அளித்த ஆர்.எஸ். பாரதி கூறுகையில்,

அதிமுகவுடன் நாங்கள் பேசவும் இல்லை... கூட்டணியும் வைக்கவில்லை. அதிமுக தீண்டத்தகாத சக்தியைபோல் அக்கட்சியுடன் கூட்டணியே வைக்காத கட்சிபோல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் பேசுவது வேடிக்கையாக உள்ளது.

அதிமுகவுடன் நாங்கள் (திமுக) கூட்டணி வைத்தால் என்ன உலகமகா தவறா?. இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு இரண்டாக உடைந்தது. இப்போது இரு கட்சிகளும் ஒருமித்த கருத்தோடு செல்லவில்லையா?



திமுகவை விட்டு அதிமுக பிரிந்து சென்று ஏறத்தாழ 54 ஆண்டுகள் ஆகிறது. அதற்காக நாங்கள் கூட்டணி வைக்கிறோம்என்றுகூறவில்லை. ஆனால், அதிமுகவும், திமுகவும் சேர்ந்து கூட்டணி வைத்தால் அதில் ஒன்றும் தவறுமில்லை. அப்படி கூறினால் உலகமகா தவறா? அதிமுக எங்கள் (திமுக) பங்காளி போன்றவர்கள். திமுகவிலிருந்து சென்றவர்கள்தானே அதிமுக.

நாங்கள் அதிமுகவுடன் கூட்டணி பேசவில்லை. அதிமுகவும், திமுகவும் தற்போது சட்டசபையில் ஒரே அணியில்தான் அமர்ந்துள்ளது. காலம் கனிந்துவிட்டது. இரு அணியையும் ஒரே அணியில் அமரவைத்துவிட்டது.

திமுகவும், அதிமுகவும் தற்போது ஒரே வரிசையில் அமர்ந்துள்ளது. இதைபார்க்கும்போது தொண்டர்கள் அனைவருமே திமுகவும், அதிமுகவும் இணைந்துவிட்டார்கள் என்பதுபோல தெரிகிறது என்கின்றனர். அதிமுகவும், திமுகவும் இணைந்ததற்கு காரணம் இவர்கள்தான் .

இவ்வாறு அவர் கூறினார்.

# தஞ்சை: மழையால் 50 ஆயிரம் நெல் மூட்டைகள் சேதம் விவசாயிகள் வேதனை



தஞ்சாவூர் ஜூன் 21

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரம் பகுதியில் பெய்த கனமழையால் திறந்தவெளியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 50 ஆயிரம் நெல் மூட்டைகள் நனைந்து சேதமடைந்த சம்பவம் விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் பட்டீஸ்வரம் பகுதியில் நேற்று திடீரென இடி, மின்னலுடன் கூடிய பலத்த கனமழை பெய்தது. தொடர்ந்து சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த மழையால் அப்பகுதியில் திறந்தவெளி சேமிப்புக் கிடங்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மழைநீரில் நனைந்தன.

அந்த கிடங்கில் லட்சக்கணக்கான நெல் மூட்டைகள் தற்காலிகமாக சேமித்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நெல் மூட்டைகளை மூடிப் பாதுகாக்க தேவையான அளவு தார்ப்பாய்கள் இல்லாததால், சுமார் 50 ஆயிரம் நெல் மூட்டைகளில் மழைநீர் புகுந்து சேதமடைந்ததாக கூறப்படுகிறது.

கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு அனுப்பாமல், பல மாதங்களாக ஒரே இடத்தில் தேக்கி வைத்திருந்ததே இந்த இழப்புக்கு முக்கிய காரணம் என விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

மேலும், தற்போது நனைந்துள்ள நெல் மூட்டைகளை உடனடியாக உலர வைக்கவோ அல்லது நவீன உலர் கலன்களுக்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நெல் மணிகள் முளைக்கத் தொடங்கி முற்றிலும் பயன்பாடற்ற நிலைக்கு தள்ளப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

விவசாயிகளின் உழைப்பின் பலன் வீணாகாமல் தடுக்க, அரசு உடனடியாக தலையிட்டு நனைந்த நெல்மூட்டைகளை போர்க்கால அடிப்படையில் கையாள வேண்டும் என்றும், சம்பவத்துக்கு காரணமான அலட்சிய அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டெல்டா பகுதி விவசாய சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

# பூண்டி ஏரியிலிருந்து நீர் திறப்பு எதிரொலி: புழல் ஏரியின் நீர்மட்டம் கிடு கிடு உயர்வு

சென்னை, ஜூன் 21

ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து பெறப்படும் கிருஷ்ணா நதிநீர் பூண்டி ஏரியில் சேமிக்கப்படுகிறது. சென்னை மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமான பூண்டி ஏரி , திருவள்ளூர் மாவட்டம், பூண்டி வட்டத்தில் 1944ஆம் ஆண்டு கட்டி திறக்கப்பட்டது.

கோடை வெயிலின் தாக்கத்தால் சென்னை மக்களின் தண்ணீர் தேவை அதிகரித்தது. இதனால் பூண்டி, புழல் உள்ளிட்ட குடிநீர் ஏரிகளில் நீர் இருப்பு வேகமாக குறைந்து வந்தது. இதையடுத்து, கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்படி கண்டலேறு அணையில் இருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்று ஆந்திர அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை விடுத்தது.

கடந்த மாதம் 23ம் தேதி கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா நதிநீர் பூண்டி ஏரிக்கு திறந்துவிடப்பட்டது. இதில் ஆந்திர விவசாயிகளின் தேவைக்கு போக, மீதமுள்ள சுமார் 300 கன அடிக்கும் அதிகமான தண்ணீர் தொடர்ந்து பூண்டி ஏரிக்கு வந்துகொண்டிருக்கிறது. இன்று காலை நிலவரப்படி பூண்டி ஏரிக்கு விநாடிக்கு 285 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

இந்த நிலையில், சென்னையின் குடிநீர் தேவையை பூர்த்திசெய்யும் முக்கிய நீராதாரங்களில் ஒன்றான பூண்டி ஏரியிலிருந்து புழல் ஏரிக்கு 250 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. புழல் ஏரியின் மொத்த கொள்ளளவு 3,300 மில்லியன் கனஅடியாகும். தற்போது ஏரியில் 1,642 மில்லியன் கன அடிக்கும் அதிகமான தண்ணீர் இருப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னைமாநகரின்குடிநீர்தேவையைபூர்த்திசெய்யும் வகையில் புழல் ஏரியில் இருந்து 183 கன அடி தண்ணீர் விநியோகத்திற்காக திறக்கப்பட்டு வருகிறது. சமீபத்திய நீர்வரத்து காரணமாக புழல் ஏரியின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது, இதனால் சென்னை மக்களின் குடிநீர் ஆதாரம் கணிசமாக வலுவடைந்துள்ளது.

# சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை: 35 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் கலந்தாய்வு

சென்னை, ஜூன் 21

தமிழ்நாட்டை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பான மாநிலமாக உருவாக்கும் நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சரால் 09.06.2026 அன்று சிங்கப்பெண் சிறப்புப் அதிரடிப்படை தொடங்கி வைக்கப்பட்டது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் பணிகளை மேம்படுத்தும் நோக்கில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களு டன் கலந்தாய்வு கூட்டம் நேற்று மாலை 4.00 மணி அளவில் தமிழ்நாடு காவல்துறை தலைமை அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டம் காவல் துறை தலைவர் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் 35 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் 51 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சார்ந்த பணிகளில் செயல்திறனை மேம்படுத்துவதற்காக, தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கருத்துகள் தகவல்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களின் மறு வாழ்வை மேம்படுத்துவதில் அவர்களுடனான அவர்களின் பங்களிப்பை பெறுவதும் அவர்களுடனான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதும் இக்கூட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.




கூட்டத்தின்போது, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பைமேம்படுத்துவதற்கானவிழிப்புணர்வுநிகழ்ச்சிகள், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவைகள், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து செயல்படும் வழிமுறைகள் தொடர்பாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தங்களது அனுபவங்களையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்துகொண்டனர்.

காவல்துறை தலைவர் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளு க்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் காவல்துறைக்கும் அரசுசாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களு க்கும் இடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் அவசியமானது என்பதை வலியுறுத்தினார்கள். மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகளை திறம்பட எதிர்கொள்வதற்கு தொடர்ச்சியான தகவல் பரிமாற்றம், ஒருங்கிணைந்த செயல்பாடு மற்றும் சமூகப் பங்களிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவமும் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

கூட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (NGOs) ஆர்வமுடன் பங்கேற்று, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான தங்களது கள அனுபவங்கள். நடைமுறை சவால்கள் மற்றும் பயனுள்ள பரிந்துரைகளை பகிர்ந்து கொண்டனர். பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பொதுமக்களிடையே சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும். பாதிக்கப்பட்டோருக்கான உடனடி மீட்பு, பாதுகாப்பு மற்றும் ஆதரவு நடவடிக்கைகளை சிறப்பு அதிரடிப்படை அரசுசாரா வறுப்படுத்தவும். தொண்டு நிறுவனங்களுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்படும். மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான தடுப்பு, பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை வலுப்படுத்த அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் செயல்படுவதில் உறுதியுடன் இருப்பதாக இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

# ஒரே நாளில் 737 மி.மீ. பதிவு; திருச்சி மாவட்டத்தில் வெளுத்துக்கட்டிய மழை

திருச்சி, ஜூன் 21

திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கோடை வெப்பத்தின் தாக்கம் கடுமையாக காணப்பட்டது. நேற்று வழக்கத்துக்கு மாறாக மாலையில் கருமேகங்கள் சூழ்ந்து இரவு கன மழை கொட்டியது. திருச்சி மாநகரில் இரவு 8.30 மணிக்கு தொடங்கிய மழை விடிய விடிய கொட்டித்தீர்த்தது. இதேபோன்று புறநகர் பகுதிகளிலும் பரவலாக நல்ல மழை பெய்தது. நேற்று பெய்த மழையில் அதிகபட்சமாக திருச்சி பொன்மலை பகுதியில் 63 மில்லி மீட்டர், திருச்சி ஜங்ஷன் பகுதியில் 61 மில்லி மீட்டர் மழை பதிவானது. மாவட்டம் முழுவதும் நேற்று ஒரே நாளில் 737.6 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இதன் சராசரி அளவு 30.73 ஆகும்.

மாவட்டத்தின் இதர பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு: கள்ளக்குடி 26.2, லால்குடி 15.6, நந்தியாறு அணைக்கட்டு 24.4, புள்ளம்பாடி 28.4, தேவி மங்கலம் 26.2, சமயபுரம் 23.4, சிறுகுடி 30.12, வாத்தலை அணைக்கட்டு 44.6, மணப்பாறை 23.6, பொன்னையார் அணை 55, கோவில்பட்டி 58.4, மருங்காபுரி 5.2, முசிறி 16, புலிவலம் 3, தாப்பேட்டை 3, நவலூர் கொட்டப்பட்டு 36.2, துவாக்குடி 56.1, கொப்பம்பட்டி 5, துறையூர் 32, திருச்சி ஏர்போர்ட் 55.1, திருச்சி டவுன் 46.நேற்று கொட்டிய மழையால் திருச்சி மாநகரில் பல்வேறு இடங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் வெள்ளம் புகுந்தது. கருமண்டபம் ஆர்.எம்.எஸ். காலனி பகுதியில் சில வீடுகளுக்குள் கழிவுநீருடன் வெள்ளம் புகுந்தது. நேற்று பெய்த பலத்த மழையால் மாநகரில் பல இடங்களில் சாலைகளில் மண் அரிப்பு ஏற்பட்டு குண்டும் குழியுமாக மாறியுள்ளது. மேலும் வெப்பத்தின் தாக்கம் குறைந்து குளிர்ச்சி நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# போதை மாத்திரை விநியோகம் செய்த வழக்கில் முக்கிய குற்றவாளி அதிரடி கைது

சென்னை, ஜூன் 21

சென்னை கண்ணகி நகர் புதுப்பேட்டை மசூதி நகர் பகுதியில் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகக் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணனுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் இன்ஸ்பெக்டர் சரவணன் தலைமையில் சப்இன்ஸ்பெக்டர் குமார், போலீசார் மனோகரன், கார்னிஸ்வரன் ஆகியோர் அடங்கிய தனிப்படை போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

இதில் கண்ணகி நகரைச் சேர்ந்த விக்னேஷ் (எ) விக்னா (வயது 30) மற்றும் வேலாயுதம் (23) ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 1.5 கிலோ கஞ்சா மற்றும் 40 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. கைதான விக்கேஷ் மற்றும் வேலாயுதத்திடம் நடத்திய விசாரணையில் அவர்கள் வடசென்னையில் ரெட்டேரி பகுதியில் இருந்து கஞ்சா, 10 கிராம் பாக்கெட்டுகளை தலா 500 ரூபாய்க்கு விற்று வந்தது தெரியவந்தது. மேலும் இவர்களுக்கு மும்பையில் இருந்து பெரிய அளவில் போதை மாத்திரைகள் சப்ளை செய்யப்பட்டுவதும் கண்டறியப்பட்டது.

இந்த போதை மாத்திரை கடத்தலின் பின்னணியில் தலைமறைவாக இருந்த முக்கிய புள்ளியான பிரேம் குமார் (24) என்பவரை போலீசார் தீவிரமாகத் தேடி வந்தனர். தலைமறைவாக இருந்த அவரை கண்ணகி நகர் போலீசார் அதிரடியாகக் கைது செய்தனர். அவரிடம் விசாரணை நடத்திய போலீசார் பின்னர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த கும்பல் வேறு யாருக்கெல்லாம் போதை மாத்திரைகளை சப்ளை செய்துள்ளது என்பது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருவாரூர் மிருதங்க இசை கலைஞர் பக்தவத்சலத்திற்கு பத்மஶ்ரீ விருது




திருவாரூர், ஜூன் 21

திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த மிருதங்க இசைக் கலைஞர் திருவாரூர் பக்தவத்சலம், தந்தை பெருமாள் பிள்ளை மற்றும் தாயார் ஆனந்தவல்லி ஆகியோரின் மகனாக 1957இல் பிறந்தார். தனது குழந்தை பருவத்திலேயே தந்தையை இழந்த இவர், ஐந்து வயதில் தனது தாயாரிடம் பாட்டு கற்க தொடங்கினார்.

பக்தவத்சலம் தனது தாய் மாமா கிருஷ்ணமூர்த்தியிடம் மிருதங்க கலையை கற்றுக் கொண்டார். தனது 9 வயதில் தாயாருக்கு பக்கவாத்தியமாக மிருதங்கம் வாசிக்க தொடங்கினார். ஆண்கள் மேல்நிலை பள்ளியில் படிப்பை முடித்த பிறகு, அரசு கலை கல்லூரியில் சேர விண்ணப்பித்தார். ஆனால், அவருக்கு மிருதங்கத்தின் மீது இருந்த ஆர்வத்தால் கல்லூரிக்கு செல்லாமல், தனது இசை வாழ்க்கையை தொடர்ந்தார்.

தஞ்சாவூர் பாணியில் மிருதங்கம் வாசிப்பதில் உலக புகழ்பெற்ற இவர், ஏராளமான சர்வதேச இசை விழாக்களில் இந்தியாவின் சார்பில் பங்கேற்றுள்ளார். ஸ்பெயினில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டித் தொடக்க நாள் விழாவில் மிருதங்கம் வாசித்துள்ளார்.

மிருதங்க கலையில் தனித்துவமான பங்களிப்பை வழங்கி, நமது பாரம்பரிய இசையை உலக அரங்கிற்கு கொண்டு சேர்த்துள்ள இவரது வாழ்நாள் சேவையை போற்றும் வகையில் இந்த ஆண்டின் பத்மஶ்ரீ விருது மத்திய அரசு அறிவித்துள்ளது.

# ஜவுளி கடை பெண் ஊழியருக்கு காதல் தொல்லை; வாலிபர் கைது சிங்கப்பெண் சிறப்பு படை அதிரடி

சென்னை, ஜூன் 21

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரை சேர்ந்த 20 வயதுடைய பெண் ஒருவர் சென்னை தியாகராயநகர் உஸ்மான் சாலையில் உள்ள பெண்கள் விடுதியில் தங்கி அப்பகுதியில் உள்ள ஜவுளி கடை ஒன்றில் வேலை பார்த்து வருகிறார்.

இவர் அவரது ஊரை சேர்ந்த வினோத்குமார் என்பவரை காதலித்துள்ளார். பின்னர், அவரது நடவடிக்கைகள் சரியில்லாததால் காதல் உறவை முறித்துள்ளார்.

எனினும் அவருக்கு வினோத்குமார் தொடர்ந்து



செல்போன் மூலம் காதல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இந்த நிலையில் அவர் கடந்த 18ந்தேதி அன்று அந்த பெண் வேலை பார்க்கும் கடைக்கு வந்துள்ளார். கடையின் மேலாளரிடம் 'இது நான் காதலிக்கும் பெண். இவரை நான் அழைத்து செல்ல உள்ளேன்' என்று கூறிவிட்டு சென்றுள்ளார். பின்னர், அந்த பெண் வேலை முடிந்து தியாகராயநகர் உஸ்மான் சாலையில் உள்ள விடுதிக்கு சென்று கொண்டிருந்தபோது அவரை வினோத்குமார் வழிமறித்து காதல் தொந்தரவு கொடுத்துள்ளார். இதுபற்றி தகவலறிந்து சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படையினர் விரைந்துவந்தனர். வினோத்குமாரை பிடித்து மாம்பலம் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதைத்தொடர்ந்து அந்த பெண் அளித்த புகாரின் பேரில் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ்போலீசார் வழக்குப்பதிவு செய்து வினோத்குமாரை கைது செய்தனர்.

# மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு ஆசிரியர் காலியிடங்களை தெரிவிக்க பள்ளிக்கல்வி துறை உத்தரவு

சென்னை, ஜூன் 21

தமிழக அரசு பள்ளிகளில் காலியாக உள்ள, ஆசிரியர் பணியிட விபரங்களை, வரும் 23ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்' என, மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு, பள்ளிக்கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்தாய்வை நடத்த, மாவட்ட வாரியாக காலியாக உள்ள தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட, அனைத்து வகை ஆசிரியர் காலியிடங்களை, வரும் 23ம் தேதிக்குள், 'எமிஸ்' இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும்.

பள்ளி தலைமை ஆசிரியருக்கோ அல்லது துறைக்கோ எவ்வித முன் தகவலும் தராமல், தொடர்ந்து ஒரு மாதத்திற்கு மேலாக பணிக்கு




வராத ஆசிரியர்களின் பணியிடங்கள் உடனடியாக காலியிடமாக அறிவிக்கப்படும்.

இதன் மூலம் நீண்ட நாட்களாக பணிக்கு வராமல் மாணவர்களின் கல்வி பாதிப்படைவதை தடுத்து, அந்த இடத்திற்கு பொது மாறுதல் கலந்தாய்வு மூலமாகவோ அல்லது புதிய நியமனம் மூலமாகவோ மாற்று ஆசிரியரை விரைவாக நியமிக்க முடியும். ஆசிரியர் காலியிடங்களை பட்டியலை பதிவேற்றிய பின், திருத்த இயலாது.

இதனால் பட்டியலில் ஏற்படும் தவறுகளுக்கு, முதன்மை மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை அருகே டீ கடையில் சோதனை என்ற பெயரில் அத்துமீறல் அதிகாரிகள் மீது வியாபாரிகள் புகார்

திருநெல்வேலி, ஜூன் 21

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே உள்ள மூலைக்கரைப்பட்டியை சேர்ந்தவர் சங்கரன். இவரது இரண்டாவது மகன் சபரிராஜன் (45). இவர் ஒரு மாற்றுத்திறனாளி. மூலைக்கரைப்பட்டி தெற்கு பஜாரில் டீக்கடை வைத்து நடத்தி வந்தார்.

கடந்த 17ம்தேதி, மூலைக்கரைப்பட்டியில் உள்ள கடைகளில் தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறதா என்று பேரூராட்சி சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனை



நடத்தினர்.

அப்போது சபரிராஜனின் டீக்கடைக்கும் வந்து சோதனையிட்டனர். அங்கு நடைபெற்ற சோதனையில் பிளாஸ்டிக் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அதற்காக சபரிராஜனுக்கு ரூ. 200 அபராதம் விதித்தனர்.

மேலும் அந்த மாற்றுத்திறனாளியின் டீக்கடையில் அதிகாரிகள் சோதனை என்ற பெயரில் கல்லாப் பெட்டியை திறந்து அத்துமீறலில் ஈடுபட்டதாக வியாபாரிகள் சங்கத்தினர் புகார் தெரிவித்துள்ளனர். கல்லாப்பெட்டியைத் திறந்து அத்துமீறலில் ஈடுபட்ட இந்த செயலை கண்டித்து, மூலைக்கரைப்பட்டி வியாபாரிகள் சங்கம் தங்களது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

வியாபாரிகள் சங்க தலைவர் சத்தியசீலன் மற்றும் வியாபாரிகள் சங்கத்தினர் திரண்டு, நேற்று மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம் மனு கொடுத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மின்சார துண்டிப்பை சாக்காக வைத்து இரவில் அடுத்தவர் மனைவியை கட்டிப்பிடித்து சில்மிஷத்தில் ஈடுபட்ட வாலிபர்

கோவை, ஜூன் 21

கோவை அருகே அடுத்தவர் மனைவியை கட்டிப்பிடித்து சில்மிஷத்தில் ஈடுபட்ட வாலிபர் அடித்துகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சேலத்தைச் சேர்ந்தவர் மணி(வயது 40). இவர் கோவை சாய்பாபா காலனி அடுத்த கோவில்மேடு பகுதியில் தங்கி கட்டிட வேலைக்கு சென்று வந்தார். இவர் அந்த பகுதியில் தனது 2 மனைவிகளுடன் தங்கி வசித்து வருகிறார்.

மணி கட்டிட வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்டால், கூனிமூக்கு பகுதிக்கு சென்று, அங்கு வேலைக்காக காத்திருப்பவர்களை சம்பளம் பேசி அழைத்து செல்வது வழக்கம்.

அதன்படி நேற்று காலை மணி கட்டிட வேலைக்கு ஆட்கள் அழைப்பதற்காக கூனிமூக்கு பகுதிக்கு வந்தார். அப்போது. அங்கிருந்த 40 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் காத்திருந்தார். அவரிடம் மணி, சம்பளம் பேசி வேலைக்கு அழைத்துச்சென்றார். பின்னர் நேற்றுமாலை வேலை முடிந்ததும் மணி அந்த வாலிபரை தனது வீட்டிற்கும் அழைத்து சென்றார். அப்போது இரவு நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருந்தது. இதனை சாக்காக வைத்துக்கொண்டு அந்த வாலிபர் திடீரென மணியின் மனைவியை ஆசை தீர கட்டிப்பிடித்தார். இதனால் அதிர்ச்சியான மணி, அந்த நபரை கடுமையாக எச்சரித்து அங்கிருந்து அனுப்பி வைத்தார்.

அதன்பின்னர் மணி இரவில் அருகே உள்ள டாஸ்மாக் கடைக்கு சென்று மது குடித்து விட்டு வந்து வீட்டில் படுத்து தூங்கினார்.

இந்த நிலையில் அந்த வாலிபர் மின்சாரம் துண்டிப்பை சாக்காக வைத்து கொண்டு மறுநாள் இரவில் மீண்டும் மணியின் வீட்டிற்கு வந்தார். அவர், மணி அயர்ந்து தூங்கி விட்டார் என நினைத்து, மணியின் வீட்டிற்குள் புகுந்தார். பின்னர் மணியின் மனைவியிடம் வாலிபர் சில்மித்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனை தூங்குவது போல் நடித்துக் கொண்டிருந்த மணி பார்த்து விட்டார் எச்சரித்து அனுப்பிய பிறகும் மீண்டும் மீண்டும் வருகிறானே என்ற ஆத்திரத்தில் இரவில் மனைவியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டதால் ஆத்திரம் அடைந்த மணி அருகே இருந்த கட்டையை எடுத்து வாலிபரை சரமாரியாக தாக்கினார். இதில் அவருக்கு தலை, முகம் உள்ளிட்ட இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. இதில் வலி தாங்க முடியாத அவர் அலறி துடித்தார். சிறிது நேரத்தில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வாலிபரின் உடலை எடுத்து சென்று தடாகம் ரோட்டில் வீசி விட்டு, எதுவும் தெரியாதது போல் மணி தனது வீட்டிற்கு வந்து விட்டார். நள்ளிரவில் அந்த வழியாக சென்றவர்கள் சாலையில் ஒருவர் பலத்த காயத்துடன் இறந்து கிடப்பதை பார்த்து சாய்பாபா காலனி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்து சென்று,

மணியை பிடித்து விசாரித்து வருகின்றனர். அவரிடம் அந்த வாலிபர் யார்? எந்த ஊரை சேர்ந்த வர் என விசாரித்தனர். அதற்கு அவர் அந்த வாலிபரின் பெயர், ஊர் தெரியாது என தெரிவித்தார். இதனை தொடர்ந்து போலீசார் கொலை செய்யப்பட்ட அந்தவாலிபரை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

# குழந்தைகளை வைத்து யாசகம்... வடமாநிலத்தவர்களை பிடித்து மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைத்த சிங்கப்பெண் படை

செங்கல்பட்டு, ஜூன் 21

வாகன ஓட்டிகளுக்கு பெரும் இடையூறாக யாசகம் பெற்று வந்த, வடமாநிலத்தை சேர்ந்தவர்களை சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையினர் மீட்டு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைத்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் உயிரியல் பூங்கா அருகே, வாகன ஓட்டிகளுக்கு பெரும் இடையூறாக காலை மற்றும் மாலை வேளைகளில் குழந்தைகளை வைத்துக் கொண்டு, வட மாநிலத்தவர்கள் யாசகம் பெற்று வருவதாகப் புகார்கள் எழுந்தன.




இதனைத் தொடர்ந்து, அங்கு சென்ற சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை காவலர்கள், அந்த வடமாநிலத்தவர்களை எச்சரித்து, செங்கல்பட்டு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்ப முயன்றனர். அப்போது கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்ட வடமாநிலத்தவர்கள், காவலர்களை தள்ளி விட்டு அங்கிருந்து தப்பியோட முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

இருப்பினும், கிளாம்பாக்கம் போலீசார் மற்றும் பொதுமக்களின் உதவியோடு, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் பெண் காவலர்கள் பத்திரமாக வேனில் ஏற்றி செங்கல்பட்டு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைத்தனர். சிங்கப்பெண் சிறப்பு படையினரின் துணிச்சலான செயலுக்கு தற்போது பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# மெரினா காமராஜர் சாலையில் மையத்தடுப்புகள் அமைக்க வேண்டும் : அதிகாரிகளுக்கு, ககன்தீப் சிங் பேடி அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 21

சென்னை தண்டையார் பேட்டை, கணேசபுரத்தில் ரூ.226.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட மேம்பாலப் பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி இன்று ஆய்வு செய்தார்.

அப்போது மேம்பால பணிகள் தற்போது 60 சதவீதம் முடிவடைந்து, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்



தில் நடைபெற்று வரும் பயோமைனிங் பணிகளை அவர் ஆய்வு செய்தார். அப்போது கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார்.

ராயபுரம் மண்டலத்தில் உள்ள நவீன மாடுகள் காப்பகத்தைப் பார்வையிட்ட அவர், சாலைகளில் மாடுகள் சுற்றித்திரிவதைத் தடுக்கவும், காப்பகங்களைச் சிறப்பாகப் பராமரிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து, மெரினா கடற்கரையை ஆய்வு செய்த ககன்தீப் சிங் பேடி மெரினா காமராஜர் சாலையில் மையத்தடுப்புகள் அமைக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் விக்டோரியா பொது அரங்கம், வில்லிவாக்கம் ஏரி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் சீரமைப்புப் பணிகளையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது சென்னை மாநகராட்சி கமிஷனர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

# பள்ளி மாணவர்களை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவதை ஏற்க முடியாது பிரேமலதா

சென்னை, ஜூன் 21

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் அருகே உள்ள அரசுப் பள்ளியின் வகுப்பறைக்குள் பாடம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரங்களில், மாணவர்களிடம் முதல்அமைச்சர் விஜய்யின் புகைப்படத்தைக் காட்டி அவரின் பெயரைக் கேட்பது, மாணவர்கள் விஜய் என்று கூறுவது அதற்கு தவெக நிர்வாகிகள் அவர் எங்களுக்கெல்லாம் அண்ணன் உங்களுக்கு அவர் மாமா என்று கூறுவது மற்றும் பெரும் தலைவர்கள் புகைப்படம் எங்கு உள்ளது அங்கே அவர் புகைப்படத்தை வைக்கப்போகிறோம் என்று கூறி புகைப்படத்தை வைப்பதும் மற்றொரு பள்ளியில் தவெக கட்சி நிர்வாகிகள் ஆய்வு செய்வதாகச் சென்று அதில் நிர்வாகி ஒருவர் அவரின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடியதாக தகவல்கள் வெளியாகி மக்களிடையே பெரும் அதிருப்தியும் வெறுப்பை ஏற்படுத்தி உள்ளது.

தேர்தல் நேரத்தில் குழந்தைகளை மூளைச் சலவை செய்து அவர்களை பயன்படுத்தி மாணவர்களையும் திசை திருப்பி இந்த ஆட்சி வெற்றி பெற்றதாக ஒரு கருத்தும், தகவலும் தமிழகம் முழுவதும் இருக்கிறது. இந்த ஆட்சி வெற்றி பெற்றது அந்த வகையில் என்றால் அதுவே ஒரு தவறான முன்னுதாரண செயலாகும். எனவே பள்ளிகள் என்பது மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான இடமாகும். எந்த அரசியல் கட்சியோ, அமைப்போ, தனிநபரோ மாணவர்களை தங்களது அரசியல் சுயலாபத்திற்காகவும் அல்லது தனிப்பட்ட விளம்பரத்திற்காகவும் பயன்படுத்த கூடாது என்று சட்டத்தில் விதிமுறையும் உள்ளது.

எனவே, இந்த சம்பவங்கள் தமிழ்நாடு முதல்அமைச்சர் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு சென்றுள்ளனவா என்ற கேள்வி அனைவரிடத்திலும் எழுந்துள்ளது. அதேபோல் சமூக நலன் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி அரசு பள்ளி மாணவர்களுடன் செல்பி எடுத்துக் கொண்டபோது, மாணவ மாணவிகள் "TVK, TVK" என முழக்கமிட்டதாக சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ள வீடியோ பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

பள்ளிகள் கல்வி கற்கும் புனிதமான இடங்களாகும். அங்கு அரசியல் சார்ந்த முழக்கங்கள் எழுப்பப்படுவது கல்வி நிலையங்களின் நடுநிலைத்தன்மையையும் மாணவர்களின் சுதந்திரமான கல்விச் சூழலையும் பாதிக்கும் செயலாகும். மாணவர்களை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தும் எந்த முயற்சியும் ஏற்றுக்கொள்ள முடியாதது. "மாற்றத்தை தருவோம், மாற்றத்தை தருவோம்" என்று கூறி, இதுபோன்ற மாற்றத்தை யாரும் விரும்பவில்லை. மக்கள் ஆக்கப்பூர்வமான மற்றும் முன்னேற்றமான மாற்றங்களையே எதிர்பார்க்கின்றனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
21.06.2026

# ‘தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவிலும் நீட் தேர்வுக்கு முடிவு கட்டுவோம்’: கி.வீரமணி



நீட் தேர்வு எழுதி ஓய்ந்திருந்த மாணவர்களுக்கு உளவியல் நெருக்கடியை உருவாக்கியதால் கோவையில் அனு கீர்த்தனா என்ற மாணவி தற்கொலை செய்துகொண்டார். அதேபோல, சேலம் எடப்பாடி அருகே கோபிகா என்ற மாணவி தன்னை மாய்த்து கொண்டார் என்ற செய்தி நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது.

இதுகுறித்து எந்த கவலையும் இல்லாமல் இன்னமும் நீட்டைத் திணித்துக் கொண்டிருக்கிறது மத்திய அரசு. அதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். நீட் தேர்வுக்கு அஞ்சி நம் குழந்தைகள் இத்தகைய முடிவுகளை எடுக்கக்கூடாது என அக்கறையுடன் கேட்டுக்கொள்கிறேன். நீட் தேர்வுக்கு எதிரான அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்போம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவிலும் நீட் தேர்வுக்கு முடிவு கட்டுவோம்.”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எம்.வி. எம்பிரஸ் சொகுசு கப்பலுக்கு சென்னை துறைமுகத்தில் உற்சாக வரவேற்பு

சென்னை, ஜூன் 21

தமிழ்நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்திற்குச் சான்றாக, எம்.வி. எம்பிரஸ் சொகுசு கப்பல் இன்று (20.06.2026) சென்னைதுறைமுகத்திற்கு வந்தடைந்தது. அந்த எம்.வி. எம்பிரஸ் சொகுசுக் கப்பலில் 1,800 பயணிகள் சென்னை வந்தடைந்தனர். இதில் சென்னையிலிருந்து 1,800 பயணிகள் பயணத்தைத் தொடங்கினர்.

இந்த நிகழ்வு, ஒரு விரிவான சொகுசு சுற்றுலாப் பயணக் காலத்தின் தொடக்கமாக அமைந்தது. ஆகஸ்ட் மாதம் வரை மூன்று மாத காலத்திற்கு, இந்தக் கப்பல் பயணங்களை மேற்கொள்ளும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை துறைமுக ஆணைய தலைவரின் வழிகாட்டுதலின் கீழ், சென்னை வந்த பயணிகளுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புடன் கூடிய அதி நவீன சொகுசுப் பயணக் கப்பல் பயணிகள் முனையம் இன்று பயணிகளின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

எம்.வி. எம்பிரஸ் கப்பலில் இருந்து வந்த பயணிகள், இந்த முனையத்தின் சிறப்பான வசதிகளை கண்டு ரசித்தனர். 4,103 சதுர மீட்டர் பரப்பளவில் விரிந்துள்ள இந்த முனையால் கட்டடம் சர்வதேச தரத்தில் கட்டப்பட்டுள்ளது.



இதில் முழுமையான வெப்பக் காற்றோட்டம், மையக் குளிரூட்டல் வசதி, உயர் தொழில்நுட்ப பயணப் பெட்டி ஸ்கேனர்கள் உள்ளிட்ட மேம்பட்ட உயர்தர பாதுகாப்பு அமைப்புகள், நவீன பயணிகள் ஓய்வறைகள், வசதியாக ஏறி இறங்குவதற்காக இருபுறங்களிலும் நகரும் படிக்கட்டுகள், சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இடம் பெற்றுள்ளன.

இந்தக் கப்பல் இலங்கையின் ஹம்பாந்தோட்டா, திரிகோணமலை, காங்கேசன்துரை, போன்ற சர்வதேச துறைமுகங்களுக்கும், விசாகப்பட்டினம், புதுச்சேரி உள்ளிட்ட முக்கிய உள்நாட்டு துறைமுகங்களுக்கும் செல்லவுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா வசதிகளுடன், சென்னை துறைமுகம் தனது வரலாற்றுச் சிறப்புமிக்க கடல்சார் பாரம்பரியத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. இத்துறைமுகம் உலகளாவிய கப்பல் சுற்றுலா வரைபடத்தில் சென்னை நகரத்தைவலுவாகநிலைநிறுத்தியுள்ளது.

# தவெக அலுவலகத்தில் மாற்று கட்சியினர் இணையும் நிகழ்ச்சியில் மின்வெட்டு ஏற்பட்டதால் சலசலப்பு



மாற்று கட்சியினர் தவெகவில் இணையும் விழா சென்னை பனையூரில் உள்ள அக்கட்சி அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் போது திடீரென மின் வெட்டு ஏற்பட்டது. இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது. தமிழ்நாட்டில் தவெக ஆட்சி அமைந்த பிறகு பல்வேறு இடங்களில் அறிவிக்கப்படாத மின் வெட்டு ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், பனையூர் அலுவலகத்திலேயே மின் வெட்டு ஏற்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க ஆகிய 2 கட்சிகளையும் வீழ்த்தி த.வெ.க. ஆட்சியை பிடித்துள்ளது. முதல்அமைச்சர் விஜய் தேர்தல் பிரசாரத்தின்போது அறிவித்த அனைத்து வாக்குறுதிகளையும் படிப்படியாக நிறைவேற்றுவேன் என்று தெரிவித்துள்ளார். இதன்படி 200 யூனிட் இலவச மின்சாரம் மற்றும் விவசாய கடன் தள்ளுபடி ஆகிய வாக்குறுதிகளையும் நிறைவேற்றி அவர் அறி விப்பு வெளியிட்டுள்ளார். சட்டமன்ற தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற த.வெ.க, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளுக்கு அமைச்சரவையிலும் இடம் கொடுத்துள்ளது. இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு ஆகிய 2 கட்சி களும் த.வெ.க. அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. தமிழக அரசியல் வரலாற்றில் முதன் முறையாக கூட்டணி கட்சிகளுக்கும் அமைச்சரவையில் விஜய் இடம் அளித்து இருப்பது அவரது செயல்பாடுகள் மீது எதிர்பார்ப்பை அதிகரித்து உள்ளது. முதல் தேர்தலிலேயே தமிழக வெற்றிக் கழகம் செல்வாக்கை பெற்று இருப்பது மற்ற அரசியல் கட்சிகளையும் திரும்பி பார்க்க வைத்துள்ளது. இதை தொடர்ந்து மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதில் இருந்து விலகி த.வெ.க.வில் அணி அணி யாக இணைந்து வருகிறார்கள். அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் 4 பேர் தங்களது பதவியை ராஜி னாமா செய்துவிட்டு த.வெ.க. வில் இணைந்துள்ள நிலையில் அந்த கட்சியை சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் தொடர்ந்து சேர்ந்து வருகிறார்கள். அந்த வகையில் இன்று 2500 பேர் மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி த.வெ.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். சென்னை கிழக்கு கடற்கரை சாலை பனையூரில் உள்ள த. வெ.க. தலைமை அலுவலக கத்தில் இணைப்பு விழா இன்று நடைபெற்றது. த.வெ.க. பொதுச்செயலாளரும், அமைச்சருமான என்.ஆனந்த் முன்னிலையில் முக்கிய பிரமுகர்கள் இன்று த.வெ.க.வில் சேர்ந்தார்கள். இந்த விழாவில் அமைச்சர்கள் செங்கோட்டை யன், ஆதவ் அர்ஜூனா, வெங்கட் ரமணன் ஆகியோரும் கலந்து கொண்ட னர். இந்த இணைப்பு விழா வில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, த.வெ.க.வில் இணைந்தவ ர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படும் என்று தெரிவி த்தார். இதற்கிடையே, இந்த இணைப்பு விழா நிகழ்ச்சியின் போது திடீரெனமின் வெட்டு ஏற்பட்டது. இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது. தமிழ்நாட்டில் தவெக ஆட்சி அமைந்த பிறகு பல்வேறு இடங்களில் அறிவிக்கப்படாத மின் வெட்டு ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், பனையூர் அலுவலகத்திலேயே மின் வெட்டு ஏற்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (21.06.2026)

**மேஷம்:** புதிய வருமான வாய்ப்புகள் உருவாகலாம். வேலைகளில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

**ரிஷபம்:** பணவிஷயங்களில்நிலைத்தன்மை காணப்படும். அலுவலகத்தில் பாராட்டுகிடைக்கவாய்ப்புஉள்ளது.

**மிதுனம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முன்னேற்றங்கள். தொடர்புத் திறன் மூலம் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

**கடகம்:** பழைய முயற்சிகள் பலன் தரும். நிலுவையில் இருந்த பணம் அல்லது வேலைகள் முன்னேறும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி வாய்ப்பு உள்ளது; தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும்.

**கன்னி:** தொழில், பணவரவு தொடர்பான நல்ல முன்னேற்றம். முதலீடுகளில் கவனமாக செயல்படுவது நல்லது.

**துலாம்:** வணிகத்தில் வளர்ச்சி மற்றும் பண லாபம் கிடைக்கக்கூடும். புதிய தொடர்புகள் உதவியாக இருக்கும்.

**விருச்சிகம்:** பணிச்சுமை அதிகரிக்கலாம். ஆனால் புதிய பொறுப்புகள் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**தனுசு:** கல்வி, பயணம் மற்றும் திறன் மேம்பாட்டுக்கான முயற்சிகள் பலன் தரும். குடும்ப ஆதரவு கிடைக்கும்

**மகரம்:** நிதி முடிவுகளை நிதானமாக எடுக்கவும்.பணியிடமாற்றங்கள் அல்லதுபுதியசூழ்நிலைகளுக்கு தயாராக இருங்கள்.

**கும்பம்:** கூட்டாண்மை மற்றும் நண்பர்களின்உதவிகிடைக்கும். உறவுகளில் நல்ல மாற்றங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** நீண்டநாள் எதிர்பார்த்த வேலைகள் நிறைவேறும். தொழில் மற்றும் சொத்து தொடர்பான விஷயங்களில் சாதகமான நாள்.

# மாதவிடாய் காரணமாக மாணவியை வெளியே நிற்க வைத்த ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் அமைச்சர் ராஜ்மோகன்

சென்னை, ஜூன் 21

கோபாலபுரத்தில்உள்ளஅரசுபள்ளியில் 11 வயது மாணவி படித்து வந்தார். மதிய உணவு இடைவேளைக்கு பிறகு அந்த மாணவி வகுப்பரையில் தனது சக தோழிகளுடன் இருந்தார். மதிய வகுப்பு எடுக்க வந்த ஆசிரியர் அந்த 11 வயது மாணவிக்கு மாதவிடாய் ஏற்பட்டதன் காரணமாகவே, துர்நாற்றம் வீசுவதாக கூறி அந்த மாணவியை வகுப்பறைக்கு வெளியே நிற்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பள்ளி முடியும் வரை சுமார் 4 மணி நேரம் அந்த சிறுமி வகுப்பறைக்கு வெளியே நிற்க வைக்கப்பட்டுள்ளார். இதனால் மனமுடைந்த மாணவி, மாதவிடாயுடன் பள்ளி முடியும் வரை வெளியே நின்றுவிட்டு, வீட்டுக்கு சென்ற மாணவி தனது பெற்றோரிடம் கூறி அழுததாக தகவல் தெரியவருகிறது.


இந்த நிலையில், பள்ளிக்கல்வி துறை அமைச்சர் ராஜ்மோகன் இது தொடர்பாக கூறியதாவது:

அரசு பள்ளியாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, மாணவிகளை மாதவிடாய் தொடர்பான எந்தவொரு மன உளைச்சலுக்கோ அல்லது பாகுபாட்டிற்கோ உள்ளாக்க கூடாது" என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மாணவியை மாதவிடாய் காரணமாக வகுப்பறைக்கு வெளியே நிற்க வைத்த சம்பவம் உண்மையில் நடந்திருந்தால், அது மிகப்பெரிய தவறு. இது தொடர்பாக விசாரணை அறிக்கையின் அடிப்படையில், குற்றம் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்மீதுகடுமையானதுறை ரீதியான மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இந்த சம்பவம் சமூக வலை தளத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஜீவாவின் ‘ஜாலியா இருந்த ஒருத்தன்’ இன்று டீசர் வெளியீடு




நகைச்சுவை கதைக்களத்தில் உருவாகி வரும் இந்தப் படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். மேலும் பரிதாபங்கள் சுதாகர் உள்ளிட்ட பலரும் சிறப்பு தோற்றங்களில் நடித்துள்ளனர். படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

‘ஜாலி யா இருந்த ஒருத்தன்’ திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக், செகண்ட் லுக் போஸ்டர்கள் வெளியாகி வைரலாகி வருகிறது.

இந்நிலையில், ‘ஜாலியா இருந்த ஒருத்தன்’ படத்தின் டீசர் வருகிற 21ந் தேதி காலை 11.11 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. ‘சிவா மனசு ல சக்தி’ வெற்றிக் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளதால், இந்தப் படத்தின் டீசரை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# “ஜன நாயகன்” இணையத்தில் கசிந்த விவகாரம்: தேடப்படும் நபரின் முன்ஜாமீன் மனு தள்ளுபடி




தமிழக முதல்அமைச்சரும், நடிகருமான விஜய் நடித்த ‘ஜனநாயகன்’ திரைப்படம் கடந்த பொங்கல் பண்டிகைக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தணிக்கை பிரச்சினையால் வெளியாகவில்லை. தணிக்கை வாரியத்தின் மறுஆய்வு குழு முன்பாக இந்தப்படம் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் இப் படம் கடந்த ஏப்ரல் 3ம் தேதி சட்ட விரோதமாக இணையத்தில் கசிந்தது. இதுதொடர்பாக தயாரிப்பு நிறுவனமான கேவிஎன் புரொடக்‌ஷன்ஸ் அளித்த புகாரின் பேரில் சென்னை சைபர் கிரைம் போலீஸார் 21 பேர் மீது வழக்குப்பதிவு செய்து பலரை கைது செய்துள்ளனர். இன்னும் சிலரை தேடி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த வழக்கில் போலீஸாரால் தேடப்பட்டு வரும் பிரதீப்குமார் என்பவர் தனக்கு முன்ஜாமீன் கோரி சென்னைஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை இன்று நடந்தது. அப்போது படத்தயாரிப்பு நிறுவனம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் விஜயன் சுப்ரமணியன், ‘மனுதாரரான பிரதீப்குமார் இந்த வழக்கின் முக்கிய குற்றவாளி என்பதால் அவருக்கு முன்ஜாமீன் வழங்கக் கூடாது’ என கடும் ஆட்சேபம் தெரிவித்தார். அதையடுத்து பிரதீப்குமாரின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# நடிகை சுவாசிகாவிற்கு இந்திய ஆஸ்கர் விருது விஜய் ஆண்டனி




‘பிச்சைக்காரன்’ படத்தை தொடர்ந்து சசி விஜய் ஆண்டனி இணைந்துள்ள படம் ‘நூறு சாமி’. இப்படத்தில் நடிப்பதோடு விஜய் ஆண்டனியே தயாரித்தும் உள்ளார். இவருக்கு ஜோடியாக சுவாசிகா நடித்துள்ளார். இவர்களோடு லிஜோமோல் ஜோஸ், கருணாஸ், அஜய் திஷன், பாலாஜி சக்திவேல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். உண்மை சம்பவ அடிப்படையில் இப்படம் உருவாகியுள்ளது. டீசர் மற்றும் டிரெய்லரும்ரசிகர்கள்மத்தியில்நல்லவரவேற்பைஉருவாக்கியுள்ளது. இப்படம் நேற்று திரையரங்குகளில் வெளியானது. இதனிடையே இப்படத்தின் சிறப்பு காட்சியை பார்த்து திரை பிரபலங்கள் படக்குழுவினரை பாராட்டி வருகின்றனர். குறிப்பாக சுவாசிகாவின் நடிப்பை பலரும் பாராட்டுகின்றனர். இயக்குநர் மிஸ்கின் பட விழாவில் காலில் விழுந்து பாராட்டினார். அதே போல் பார்த்திபன் தனது யூடியூப் சேனலுக்கு நேர்காணல் செய்ய அழைத்து பூ கொடுத்துப் பாராட்டியிருந்தார். மேலும் தற்போது திரைப் பிரபலங்கள் பலரும் சமூக வலைதளம் மூலம் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் இப்படத்தின் பத்திரிக்கையாளர்கள் காட்சி சென்னையில் திரையிடப்பட்டது. படத்தை பார்த்த பத்திரிக்கையாளர்கள் படக்குழுவினரை பாராட்டினர். பின்பு செய்தியாளர்கள சந்திப்பு நடைபெற்றது. இதில் பேசிய விஜய் ஆண்டனி, “இதுவரை 20 படங்கள் நடித்துவிட்டேன். அதில் படம் நன்றாக இருக்கிறது, நல்ல கதை எனப் பாராட்டுவார்கள். என்னுடைய நடிப்பை யாரும் பாராட்டியது கிடையாது, ஆனால் முதல் முறையாக என்னுடைய நடிப்பிற்காகப் பாராட்டிய படம் நூறு சாமி” என்றார். நடிகை சுவாசிகா தனது சிறந்த நடிப்பிற்காக தேசிய விருதுக்கு மேல் தகுதியானவர் என்றும், இந்தியாவில் 'ஆஸ்கர்' விருதுகள் கொடுக்கப்பட்டால் அது சுவாசிகாவிற்குத் தான் கொடுக்கப்பட வேண்டும் என்றும் நடிகர் விஜய் ஆண்டனி பாராட்டியுள்ளார்சு வாசிகாவிற்கு இந்திய ஆஸ்கர் கொடுப்பதாக ஒரு தண்ணீர் பாட்டிலை அவார்டாக நினைத்து சுவாசிகாவிற்கு கொடுத்து மகிழ்ந்தார்.

# மகளிர் டி20 உலகக்கோப்பை: நெதர்லாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா அபார வெற்றி



மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இன்று நடந்த லீக் ஆட்டத்தில் நெதர்லாந்தை 98 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

10வது மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் கடந்த 12ம் தேதி தொடங்கியது. 12 அணிகள் பங்கேற்றுள்ள மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரில் சவுத்ஹம்டன் நகரில் இன்று நடைபெற்ற 14வது லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா , நெதர்லாந்து அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற நெதர்லாந்து முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து, முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 219 ரன்கள் குவித்தது.அந்த அணியின் பெத் பொனி அதிகபட்சமாக 74 ரன்கள் குவித்தார். நெதர்லாந்து அணியின் ஐரிஷ் வில்லிங் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 220 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 121 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் நெதர்லாந்தை 98 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலியா அபார வெற்றிபெற்றது. சிறப்பாக பந்து வீசிய ஆஸ்திரேலிய வீராங்கனை கிம் கர்த் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

# மகளிர் டி20 உலகக்கோப்பை: பாகிஸ்தானுக்கு சவாலான இலக்கு நிர்ணயித்த வங்காளதேசம்



மகளிர்டி20உலகக்கோப்பைகிரிக்கெட்தொடரில்நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு சவாலான இலக்கை வங்காளதேசம் நிர்ணயித்துள்ளது.

10வது மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் கடந்த 12ம் தேதி தொடங்கியது. 12 அணிகள் பங்கேற்றுள்ள மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் சவுத்ஹம்டன் நகரில் நடைபெற்றுவரும் 15வது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான், வங்காளதேசம் மோதி வருகின்றன. இப்போட்டியில் டாஸ் வென்ற வங்காளதேசம் முதலில் பேட்டிங் தேர்வு செய்தது.

இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த வங்காளதேசம் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 123 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் ஷெர்னா அக்தர் அதிகபட்சமாக 39 ரன்கள் சேர்த்தார். 124 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கி விளையாடி வருகிறது.

# ஜெய்ஸ்வால் அபார சதம்; ஆப்கானிஸ்தானை வீழ்த்திய இந்தியா



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3வது ஒருநாள் போட்டியில் இந்தியா அபார வெற்றிபெற்றது. இந்திய வீரர் ஜெய்ஸ்வால் சதம் விளாசி அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இந்தியா சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 1 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 300 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றிபெற்றது.

இதையடுத்து, இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற 2 ஒருநாள் போட்டிகளிலும் இந்தியா வெற்றிபெற்றது.

இந்நிலையில், இந்தியா , ஆப்கானிஸ்தான் இடையேயான 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் பேட்டிங் தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் 44.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 218 ரன்கள் எடுத்தது. சிறப்பாக ஆடிய அந்த அணியின் கேப்டன் ஹஷ்மத்துல்லா ஷகிடி சதம் விளாசினார். அவர் 102 ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். சிறப்பாக பந்து வீசிய இந்திய வீரர் பிரசித் கிருஷ்ணா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனை தொடர்ந்து 219 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க வீரர்கள் ஜெய்ஸ்வால், ரோகித் சர்மா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இரு வீரர்களும் அரைசதம் விளாசினர். ரோகித் சர்மா 79 ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். அதேவேளை, அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெய்ஸ்வால் சதம் விளாசினார். இறுதியில் 28.1 ஓவர்கள் 224 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் ஆப்கானிஸ்தானை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றிபெற்றது. சதம் விளாசிய ஜெய்ஸ்வால் 110 ரன்களுடனும், ஸ்ரேயாஷ் 20 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரை இந்ஹ்டியா முழுமையாக கைப்பற்றியது.

PRINTED BY KANIRAJA V. PUBLISHED BY KANIRAJA V. ON BEHALF OF NAMADHU DHINA KANI TAMIL DAILY AND PRINTED AT SEAMAN GRAPHICS NO. 7/253, KVN PURAM 2 2ND STREET, KILPAUKGARDEN, CHENNAI 600010. AND PUBLISHED AT NO.28, THALIKATTIPALAYAM, KAITHAMALAI ROAD, UTTUKULI, TIRUPPUR - 638751. EDITOR: KANI RAJA V.